**நாள்.20.01.2025 – SC.No.26/2020 – P.W.1**

**அ.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி எனக்கு மருமகன் முறை வேண்டும் என்றால் சரிதான்.என் மனைவி உயிருடன் இல்லை. என் மனைவி உயிருடன் இருக்கும்போது பல்வன் என்ற பாலசுப்பிரமணியன் என்ற 8 வயதுடைய பையனை 30 வருடங்களுக்கு முன்னர் நானும், என் மனைவியும் வளர்த்து வந்தோம் என்றால் சரிதான்.அதன்பின்னர் பல்வன் என்ற பாலசுப்பிரமணியனின் நடவடிக்கைகள் பிடிக்காததால் மேற்படி பல்வன் என்ற பாலசுப்பிரமணியனை வீட்டை விட்டு துரத்திவிட்டோம் என்று சொன்னால் தவறு. பல்வன் என்ற பாலசுப்பிரமணியனுக்கு எதிரி உதவிகள் செய்து வந்தார் என்று சொன்னால் தவறு. என் வீட்டிற்கும், எதிரி வீட்டிற்கும் இடையே உள்ள சந்து பலகாலமாக இருந்து வருகிறது. நான் இதற்கு முன்னர் வடைகடை போட்டிருந்தேன். அந்த இடம் எதிரியினுடையது என்று சொன்னால் தவறு. எதிரியின் இடத்தில் நான் செங்கல் கட்டு கட்டி மாட்டுத்தொழுவம் அமைக்க முயற்சித்தேன் என்று சொன்னால் தவறு. சந்து இடத்தை அனுபவம் செய்வது சம்பந்தமாக தட்டார்மடம் காவல் நிலையத்தில் விசாரணை நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். அந்த விசாரணையின்போது காவல் துறையினர் நான் கட்டியிருந்த செங்கல் கட்டுமானத்தை அப்புறப்படுத்த சொன்னார்கள் என்று சொன்னால் தவறு. நடைபாதையை எதிரி ஆக்கிரமித்துவிட்டதாக

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நான் வழக்கு போட்டிருந்தேன் என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கிற்கு பின்னர் சர்வேயரை கொண்டு இடத்தை அளக்க எதிரி நடவடிக்கை எடுத்தார் என்று சொன்னால் தவறு. சர்வேயர் கொண்டு இடத்தை அளக்க நான் நடவடிக்கை எடுத்தேன். சந்தின் அகலம் சுமார் 5 அடி என்று சொன்னால் சரிதான். தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் வைத்து போலீஸ்காரர் ஒருவரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலத்தில் நான் இடது கைபெருவிரல் ரேகையை இட்டேன். புகார் வாக்குமூலத்தில் கடைசி மூன்றுவரிகள் நெருக்கமாக எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பலவகையான அருவாள்கள் உள்ளன என்று சொன்னால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் அருவாள் என்று மட்டும் தெரிவித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சுமார் 1 மணிநேரம் இருந்தேன். ஜெயக்குமார் என்பவர் என்னுடைய அக்கா மகன். பேச்சியம்மாள் என்பவர் என்னுடைய மதினியார் மகள். ஜெயக்குமாருக்கும், எனக்கும் இடையே 10 வருடங்களாக சொத்து பிரச்சனை உள்ளது என்று சொன்னால் தவறு. சொத்து பிரச்சனையால் நான் ஜெயக்குமாரை அடிக்க முற்பட்டேன் என்று சொன்னால் தவறு. சார்பு ஆய்வாளர் இசக்கிராஜா என்பவரை எனக்கு தெரியும். இந்த வழக்கின் சம்பவம் நடந்தவுடன் சார்பு ஆய்வாளர் இசக்கிராஜா சம்பவ இடத்திற்கு வந்தாரா என்றால் இல்லை. சார்பு ஆய்வாளர் இசக்கிராஜா எனக்கு வேண்டிய நபர் என்று சொன்னால் தவறு.

புகார் வாக்குமூலம் கொடுக்க அவர்தான் எனக்கு யோசனை அளித்தார் என்று சொன்னால் தவறு. எதிரி அருவாளை கொண்டு வந்ததாக நான் பொய் சொல்கிறேன் என்று சொன்னால் தவறு. பகை காரணத்தால் நான்தான் எதிரியை கம்பி போன்ற ஆயுதத்தை கொண்டு தாக்கினேன் என்று சொன்னால் தவறு. அதனை என் மனைவி சுப்பம்மாள் தடுக்க முற்பட்டு அவருக்கு காலில் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் தவறு. நான் கம்பியை கொண்டு எதிரியை மீண்டும் தாக்க முற்பட்டபோது அந்த கம்பியை பிடிங்கி எதிரி என்னை அடித்தார் என்றுசொன்னால் தவறு. அதனால் தான் எனக்கு காயங்கள் ஏற்பட்டது என்று சொன்னால் தவறு. சம்பவ சாட்சிகளாக நான் தெரிவித்துள்ள நபர்கள் அனைவரும் சம்பவத்தை பார்க்கவில்லை என்று சொன்னால்தவறு. நான் வசிக்கும் தெருவில் 6 வீடுகள் உள்ளன. என் வீட்டிற்கு பின்புறம் சலவைத்தொழிலாளிகள் குடியிருப்பு உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவம் 1 மணிநேரம் நடந்தது. சம்பவத்தின்போது தெருவில் உள்ளவர்கள் யாரும் சம்பவ இடத்தில் கூடவில்லை. நான் சொல்லும் தேதியில், நேரத்தில் எதிரி என்னை அருவாளால் தாக்கவில்லை என்று சொன்னால் தவறு. எதிரி தன்னை தற்காத்துகொள்ள தற்காப்பிற்காக என்னை தாக்கினார் என்று சொன்னால் தவறு.

<u>**மறுவிசாரணை :**</u> இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அளித்த சாட்சியம் அவர் கூறிய அதே வார்த்தைகளால் என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் எதிரி / எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி இடது கைபெருவிரல் ரேகை செய்துள்ளார்.

MADHAVA RAMANUJAM S

Digitally signed by MADHAVA RAMANUJAM S
Date: 2025.01.20 17:12:55 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
தூத்துக்குடி.

தட்டச்சு செய்தவர் – சு.கோமதி